கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்
விலை ரூபா 10/-
மலர்-04 செப்ரெம்பர்-2011 இதழ்-47

### குறளமுதம்-47

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-5 -அறத்துப்பால்-இல்லறவியல்**

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

முறைப்படி இல்லற வாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், பிற வழிகளில் வாழ முயல்வார் எல்லாருள்ளும் தலைமையானவன் ஆவான்.

# கூட்டுறவு அபிவிருத்தி நிதியை சிறந்த முறையில் பயன்படுத்தவும்!

## வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆலோசனை!

வடமாகாண அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஆளுனர் ஜீ.ஏ.சந்திர சிறியினால் வழங்கப்பட்ட நிதியை பெற்றுக்கொண்ட சங்கங்கள் சரியான முறையில் பயன்படுத்தி சங்கங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி-வசந்தகுமார் நிதியைப் பெற்ற சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் மேற்கண்ட ஆலோசனைகளை வழங்கினார்.

அங்கு அவர் தொடர்ந்து ஆலோசனை வழங்குகையில்,

ஆளுனரால் வழங்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி நிதியை பருத்தித்துறை, சுன்னாகம், வேலணை, பண்டத்தரிப்பு, அச்சுவேலி ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த வருடம் பெற்றுக் கொண்டன.

இந்நிதியின்மூலம் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு அதனால் கிடைக்கப்பெறுகின்ற இலாபத்தினையும் சங்கத்தின் அபிவிருத்திக்கும் வேலைவாய்ப்பிற்கும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்நிதிப் பயன்பாட்டினை குறித்த சங்கங்கள் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்வார்களேயானால் இலாபத்தினை அடைய முடியும். இந்நிதி உதவியின்மூலம் பாம் கோப்சிற்றிகளை அமைத்து நடத்தி வருகின்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பாராட்டுக்குரியன.

இக் கோப்சிற்றி நவீன மயப் படுத்தப்பட்டு அதில் பணிபுரியும் பணியாளர்கள் பணியின்போது விசேடமான மேல் அங்கிகளை அணிந்து கடமையாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை சங்கங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

(6ம் பக்கம் பார்க்க)

## 20 இலட்சம் வெற்றுப் போத்தல்களை கொள்வனவு செய்ய சமாசம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போத்தலில் கள் அடைக்கும் தொழிலை தனது அங்கத்துவ சங்கங்களின் மூலமாக விஸ்தரிக்கும் நோக்குடன் 2012ம் ஆண்டு சுமார் 20 இலட்சம் புதிய வெற்றுப்போத்தல்களை கொள்வனவு செய்து சங்கங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்போத்தல்கள் கொள்வனவு சம்பந்தமாக கூ.அ.உ. ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்ட மாதாந்த மாநாட்டில் வழங்கிய ஆலோசனையின்படி உபகுழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு அதன் மூலம் இந்நடவடிக்கையை சமாசம் மேற்கொண்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

## புதிய கூட்ட மண்டபத்துக்கு அன்பளிப்புப் பொருட்கள்!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய கூட்ட மண்டபத்துக்கு அதன் அங்கத்துவ சங்கங்களான அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 5அடி உயரமான இரண்டு(2) பித்தளைக் குத்து விளக்குகளையும், கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒலிபெருக்கிச் சாதனங்களையும், அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட கூட்ட மேசையினையும், வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம் (6ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

"கொள்ளைக்காரன் பணக்காரனை கொள்ளையடித்து ஜீவனம் செய்கிறான். முதலாளி ஏழையைக் கொள்ளையடித்து ஜீவனம் செய்கிறான்.

–ஸேக்ஸ்பியர்–

## கற்பகக்கரு

### கூட்டுறவின் சிகரம்

கூட்டுறவு இயக்கத்தின் புனிதத் தன்மையையும் அதன் கொள்கைகளின் வெளிப்படைத் தன்மையையும் எடுத்துக்கூறுவதாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

அங்கத்தவர்களின் வாழ்வாதார தேவைகளுக்கு உதவுவதில் இச்சங்கங்கள் முன் உதாரணமாகத் திகழ்வதுடன் அவர்களுடைய தேவைகளையும், அபிலாசைகளையும் பூரணமாக நிறைவேற்றிக் கொடுப்பதில் கடந்த 39 ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தினதோ மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதோ நிதியுதவி, அனுசரணை எதுவுமின்றி அங்கத்தவர்களின் கடின உழைப்பால் பெறப்படும் மூலதனத்தின் உதவியோடு சிறந்த நிர்வாக கட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் நலநோன்புத் திட்டங்களுடன் இயங்கி வரும் இச்சங்கங்கள் உண்மையிலேயே கூட்டுறவு இயக்கத்தின் விடிவெள்ளிகளாக திகழ்ந்து வருகின்றன.

அங்கத்தவர்களது வியர்வை சிந்திய உழைப்பில் அவர்களுக்கு கிடைக்கின்ற பரிசில்களும் கௌரவங்களும் பாராட்டுக்களும் வேறு எந்த ஒரு நிறுவனத்திலும் காணப்படாத ஒரு சிறப்புமிக்க அம்சமாகும். அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரது பிள்ளைகளுக்கு கல்விக்கான ஊக்குவிப்பு நிதி உதவிகளை செய்து வருவதுடன் மழலைச் செல்வங்களின் ஆரம்பக் கல்வி மேம்பாட்டுக்கு முன்பள்ளிகளை அமைத்து அவற்றின்மூலம் கல்வி புகட்டி வருவது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

இச்சங்கங்கள் வெறுமனே மதுசார உற்பத்தியோடு மட்டும்தான் தங்களது தொழிற்பாட்டை மட்டுப்படுத்தி வருகின்றன என்று கூறுபவர்களின் கூற்றுக்கு மறுதலிப்பாக மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எமது மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்தியில் கணிசமான அளவு பங்கேற்றுவரும் நிறுவனங்கள், நிறுவனம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருவதினால் தாம் ஈட்டும் நிதியை துஸ்பிரயோகம் செய்யாது தமக்கும் தம்மோடு இணைந்த தொழிலாள வர்க்கத்தினருக்கும் பகிர்ந்தளித்து வருகிறார்கள்.

சமாசத்தைப் பொறுத்தளவில் தனது அங்கத்துவ சங்கங்களின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கும், உற்சாகம் ஊட்டுவதற்கும் ஏற்ற வகையில் ஆண்டு தோறும் பல இலட்சக்கணக்கான ரூபாக்களை செலவிட்டு அதன்மூலம் அவர்களது வாழ்நாள்முழுவதும் நெஞ்சில் நிலைத்து நிற்கக்கூடிய பரிசில்களை வழங்கிவருவது சமாசத்தின் ஒரு சாதனையாக காணக்கூடியதாக உள்ளது.

பாராட்டும் கௌரவிப்பும் பரிசில்களையும் தவிர்த்து அங்கத்தவர்களது பிற்கால வாழ்க்கையை வளங் கொழிக்க செய்யும் வகையில் சமாசம் பல்வேறு விதமான கொடுப்பனவுகளை (மாதாந்த ஒய்வூதியம்) வழங்கி வருவது இச்சங்கங்களின் தனிச்சிறப்பாகும். இச்சிறப்பு மேன்மேலும் விரிவடைந்து செல்வதற்கு சங்கங்கள் சமாசத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென கற்பகம் கேட்டுக் கொள்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

–ஆசிரியர்–

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்ட நடைமுறைவிதி

(முன்னையதிலிருந்து திருத்தம் செய்யப்பட்டு கூ.அ.உ. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய அமைப்புக்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் அவர்களுடன் இணைந்த குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரின் நலன்கள் கருதி சமாசத்தால் 2002ம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டம் அங்கத்தவர்கள் பணியாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது.

மேலும் சமூக அபிவிருத்தி கருதி சமூகத்தின் தேவைகளையும் வளர்ச்சியினையும் கவனத்திற் கொண்டு இத்திட்டத்தில் இணைந்துள்ள அங்கத்தவர்கள், பணியாளர்களின் கோரிக்கைகளையும் கவனத்திற் கொண்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. (01-01-2011ம் திகதியில் இருந்து) ஏற்கனவே 2002ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்நிதியத்திற்கு அங்கத்துவ சங்கங்களால் உரிய முறைப்படி தமது கள், சாராயத்தின் விற்பனையில் இருந்து கழிக்கப்படும் நிதியை சமாசத்திற்கு முன்னைய காலங்களைப் போல வழங்கி இந்நிதியத்தினை வலுப்படுத்தல் வேண்டும். இந்நிதியம் உருவாக்கப்பட்டது அங்கத்தவர், பணியாளர், அவர் சார்ந்த சமூகத்தினது சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி கருதியேயாகும். இந்நிதியத்தின் நலத்திட்ட நடைமுறைவிதி சமூக அபிவிருத்திக் குழு பிரதிநிதிகளும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரது ஆலோசனைக்கு அமைவாகவும் கூட்டுறவுச் சட்டம், விதி, துணைவிதி ஆகியவற்றுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டம் பாரிய வெற்றியளிக்கவும், தொடர்ந்து வெற்றிகரமாக செயற்படுத்தவும் அங்கத்துவ கூட்டுறவு நிறுவனங்கள் தமது பூரணமான ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டுகிறோம்.

#### நோக்கம்

1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் 1979ம் ஆண்டு உருவாக்கப்பட்ட வடமாகாண ப.தெ.வ. அ.கூ.ச.சமாசமும், 1991ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொத்தணிகளும், 1992ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கமும் தற்போதுவரை சிறப்பாக செயற்பட்டு வந்தபோதிலும் இந்நிறுவனங்கள் உருவாக்கப்பட்ட நோக்கங்கள் இன்னமும் முழுமையான நிறைவேற்றப்படவில்லை. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் சமாசம் 2006ம் ஆண்டு தொடக்கம் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்நலத்திட்டத்துடன் மேலும் ஒரு பாரிய சமூக நலத்திட்ட செயற்பாட்டினை 2010ம் ஆண்டு தொடக்கம் பின்வரும் முக்கிய விடயங்களை நிறைவேற்றும் குறிக்கோள் கொண்டதாக செயற்படுத்துவதன் மூலம் அங்கத்தவர்களை கூட்டுறவில் நம்பிக்கை கொண்டவர்களாக வளர்ச்சிபெறச் செய்வதே நோக்கமாகும்.

#### குறிக்கோள்

பனை வளம் சார்ந்த கூட்டுறவு அமைப்புக்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், அவர்சார்ந்த உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தலும், பனை வளம் சார்ந்த தொழிற்துறை உற்பத்தி, விற்பனையில் நவீனத்துவத்தை புகுத்தி வளர்ச்சியடைச் செய்வதுமாகும். [வளரும்]

## யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பணியாளர் நலநோன்புக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்!

யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பணியாளர் நலநோன்புக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும்13-10-2011ம் திகதி அச்சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அச்சங்கத்தின் உபவிதி தொடர்பில் திருத்தம் செய்வதற்கான பிரேரணைகள் இயக்குனர் சபையால் பரிந்துரைக்கப்படவுள்ளன.

அப் பிரேரணைகள் வருமாறு,

**2.5 சங்கத்தின் நிதிப்பயன்பாடு**

2.5.3 உறுப்பினர் கொடுப்பனவு

2.5.3.1 உறுப்பினரது சேவைக் காலத்தில் வன்செயலால் அல்லது விபத்தால் இறந்தால் ரூபா 50,000 நட்ட ஈடாக அவரது பின் உரித்தாளிக்கு வழங்கப்படும்.

இதில் திருத்தமாக பின்வரும் விளக்கத்தை சேர்த்துக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

➢ சேவைக் காலம் என்பது நீண்ட கால விடுமுறை, ஒழுக்காற்று விடுவிப்பு பெற்றவருக்கு கொடுப்பனவுகள் வழங்க முடியாது என சபை ஏகமனதாக தீர்மானித்தது.

2.5.3.2 சேவைக் காலத்தில் உறுப்பினர் இயற்கை மரணம் அடைந்தால் ரூபா 15,000 நட்டஈடாக வழங்கப்படும்.

இதனைப் பின்வருமாறு திருத்தம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

➢ சேவைக் காலத்தில் உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால் ரூபா 20,000 நட்ட ஈடாக வழங்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

2.5.3.3 வன்செயலால் அல்லது விபத்தால் ஏற்படுகின்ற இயலாமைக்கு

01. உழைப்பாற்றல் 20% உள் 5,000
02. உழைப்பாற்றல் 40% உள் 10,000
03. உழைப்பாற்றல் 60% உள் 20,000
04. உழைப்பாற்றல் 80% உள் 35,000
05. உழைப்பாற்றல் 100% உள் 45,000

இதனை பின்வருமாறு திருத்தம் செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

➢ வன்செயலால் அல்லது விபத்தால் ஏற்படுகின்ற இயலாமைக்கு அல்லது சுகவீனம் காரணமாக ஏற்படுகின்ற இயலாமைக்கு கீழ்க்காணும் விபரப்படி இழப்பீட்டுத்தொகை வழங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

01. ஒரு கை இழப்பு இயங்காமை ரூபா 10,000
02. இரு கை இழப்பு இயங்காமை ரூபா 20,000
03. ஒரு கால் இழப்பு இயங்காமை ரூபா 10,000
04. இரு கால் இழப்பு இயங்காமை ரூபா 20,000
05. ஒரு கண் பார்வை இழப்பு இயங்காமை ரூபா 10,000
06. இரு கண் பர்வை இழப்பு இயங்காமை ரூபா 20,000
07. உடல் அவயவங்கள் பூரண இயங்காமை ரூபா 50,000

மேலும் சில கொடுப்பனவுகளை பின்வருமாறு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

உறுப்புகளுக்கு சத்திரசிகிச்சை செய்தால் பின்வருமாறு வழங்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

➢இருதய சத்திர சிகிச்சை ரூ.20,000
➢சிறுநீரக சத்திர சிகிச்சை ரூ.10,000
➢குடல் சத்திர சிகிச்சை ரூ.5,000

விபத்தால் ஏற்படுகின்ற இயலாமைக்கு ரூபா 5,000க்கு மேற்படாது கொடுப்பனவு வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

வன்செயல்/இறப்பு/விபத்து/சுகயீனம் ஏற்கனவே கொடுப்பனவு பெற்றிருந்தால் அப்பணியாளர்கள் ஓய்வுபெறும் அங்கத்தவர்களுக்கு ஓய்வுபெறும் பணியாளர் கொடுப்பனவு வழங்குவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஓய்வுபெறும் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு வழங்கும்போது எதுவித இழப்பு கொடுப்பனவும் பெற்றுக்கொள்ளாதோர்க்கு வருட ரீதியில் ஊக்குவிப்பு பின்வரும் விபரப்படி வழங்க வேண்டுமென சபையால் தீர்மானிக்கப்பட்டது.

➢5 வருடத்திற்கு மேல் ரூ.250.00
➢10 வருடத்திற்கு மேல் ரூ.500.00
➢15 வருடத்திற்கு மேல் ரூ.750.00
➢20 வருடத்திற்கு மேல் ரூ.1,000.00

தொடர்ச்சியாக எமது சங்க நிதிய பங்களிப்பு செலுத்துபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட நிதி ஊக்குவிப்பு வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

வன்செயல்/விபத்து/சுகயீனம்/இயலாமைக்கு கொடுப்பனவு வழங்கும்போது அரச மருத்துவ நிபுணர் சான்றிதழ் பெற்று நிதி வழங்க வேண்டுமென சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கோண்டாவில் சங்கத்தில் கூட்டுறவுதின விழா!

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் 89வது சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழா எதிர்வரும் 14ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.வீ.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.கே.பாலச்சந்திரன், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசத் தலைவர் திரு.த.சிவலிங்கம், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.இ.இராஜாராம், யாழ். மாவட்ட கூட்டுறவு தலைமை அலுவலர் திரு இ.விஜயமோகனராஜா, யா.மா.சி.க.கூ.ச.சமாசத் தலைவர் திரு.செ.இலகுநாதன், யா.மா.கூ. பணியாளர் நலநோன்பு.கூ.சங்கத் தலைவர் திரு.கா.சிவஞானம், யா.மா.ப.தெ.வ.அ.கூ.நி.ப.ந.கூ.சங்கத் தலைவர் திரு.கி.குணரத்தினம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் மற்றும் கூட்டுறவு அலுவலர்கள், சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கொத்தணிகளின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவுகள், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், வைப்புச் சான்றிதழ்கள் வழங்கல், கூட்டுறவு தினவிழாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், மற்றும் சிறந்த உறுப்பினர்கள், பணியாளர்கள், ஓய்வுபெற்ற உறுப்பினர்கள் ஆகியோர் கௌரவிப்பு ஆகியன நடைபெறவுள்ளன.

**2009, 2010ம் ஆண்டுகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகள், மற்றும் 2009, 2010ம் ஆண்டுகளில் சிறந்த அங்கத்தவர்களாக சமாசத்தால் தெரிவுசெய்யப்பட்ட அதன் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர் விபரம்.**

## 2009ம் ஆண்டில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்

### அங்கத்தவர்களின் பிள்ளைகள்

01. சிவசுப்பிரமணியம்–டதுர்ஜியா –151 – சாவகச்சேரி ப.தெ.சங்கம்
02. வேலாயுதம்–சுரேஸ் –149 – பருத்தித்துறை ப.தெ.சங்கம்
03. ஜேசுதாஸ்–மேரிஜெனிஸ்ரிகா –145 – கோண்டாவில் ப.தெ.சங்கம்
04. கணேசமூர்த்தி–டென்சிகா –143 – கரவெட்டி ப.தெ.சங்கம்
05. துரைஜயா–விதுர்சன் –143 – வேலணை ப.தெ.சங்கம்
06. நற்குணம்–ரசாந்தன் –141 – கொடிகாமம் ப.தெ.சங்கம்

### பணியாளர்களின் பிள்ளைகள்

01. சுடர்மணி–கமிலன் –161 – அச்சுவேலி ப.தெ.சங்கம்
02. சிவஞானம்–லக்ஷியா –152 – தென்மராட்சிக் கொத்தணி
03. புனிதராசா–கஜானா –148 – சித்த வைத்திய கூ.சங்கம்
04. விஜயகுமார்–விதுஷா –147 – சங்கானை ப.தெ.சங்கம்
05. மங்கேஸ்வரன்–அனுர்தா –144 – வடமராட்சிக் கொத்தணி
06. கிருபாகரன்–டக்ஷலன் –141 – அரியாலை ப.தெ.சங்கம்
07. அருள்நாயகம்–ஜெனிக்கா –140 – வேலணை ப.தெ.சங்கம்

## 2010ம் ஆண்டில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்

### அங்கத்தவர்களின் பிள்ளைகள்

01. ஞானசேகரம்–சோபிதன் –156 – அச்சுவேலி ப.தெ.சங்கம்
02. தவலோகநாதன்–சாயிஷா –150 – பருத்தித்துறை ப.தெ.சங்கம்
03. ஜெயராசா–லிதுனா –148 – மானிப்பாய் ப.தெ.சங்கம்
04. மாணிக்கராசா–சபீதா –146 – சாவகச்சேரி ப.தெ.சங்கம்
05. திருமதி ச.தயானி–மதுமிதா –144 – தெல்லிப்பளை ப.தெ.சங்கம்
06. பிரபாஸ்கரன்–எஜிந்தன் –144 – சங்கானை ப.தெ.சங்கம்

### பணியாளர்களின் பிள்ளைகள்

01. கதிர்காமலிங்கம்–கேதுஷன் –164 – வலிகாமம் கொத்தணி
02. சிவனேந்திரன்–மிக்ஷன் –157 – வேலணை ப.தெ.சங்கம்
03. சதானந்தன்–நவரங்கன் –154 – வலிகாமம் கொத்தணி
04. முருகானந்தன்–பவப்பிரியன் –151 – வலிகாமம் கொத்தணி
05. குணரத்தினம்–யோயல் –146 – வேலணை ப.தெ.சங்கம்
06. சுரேஸ்–லக்ஷா –144 – சுன்னாகம் ப.தெ.சங்கம்

## 2009ம் ஆண்டு சிறந்த அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டோர்

01. வடிவேலு–தெய்வேந்திரம் – யாழ்ப்பாணம் ப.தெ.சங்கம்
02. சின்னத்தம்பி–ஜெயக்குமார் – அரியாலை ப.தெ.சங்கம்
03. கா.முருகன் – கோப்பாய் ப.தெ.சங்கம்
04. கிட்டிணன்–ஞானசேகரம் – அச்சுவேலி ப.தெ.சங்கம்
05. பொன்னுத்துரை–சுரேஸ்ராசா – கரவெட்டி ப.தெ.சங்கம்
06. ம.நவயுகன் – பருத்தித்துறை ப.தெ.சங்கம்
07. சின்னையா மகாலிங்கம் – சாவகச்சேரி ப.தெ.சங்கம்
08. கனகரத்தினம்–சந்திரகுமார் – கொடிகாமம் ப.தெ.சங்கம்
09. வீரகத்தி–சிவராசா – வேலணை ப.தெ.சங்கம்
10. இராசேந்திரம்–ஜேசுதாசன் – ஊர்காவற்றுறை ப.தெ.சங்கம்
11. கதிரவேலு–சுப்பிரமணியம் – மானிப்பாய் ப.தெ.சங்கம்
12. மா.குமாரதாஸ் – சங்கானை ப.தெ.சங்கம்
13. தி.இந்திரகுமார் – பண்டத்தரிப்பு ப.தெ.சங்கம்
14. முருகன்–பரமேஸ்வரன் – காரைநகர் ப.தெ.சங்கம்
15. சுப்பர்–தர்மலிங்கம் – கோண்டாவில் ப.தெ.சங்கம்
16. துரை–பன்னீர்செல்வம் – சுன்னாகம் ப.தெ.சங்கம்
17. சீனியர்–குணரத்தினம் –தெல்லிப்பளை ப.தெ.சங்கம்

## 2010ம் ஆண்டு சிறந்த அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டோர்

01. வடிவேலு–தெய்வேந்திரம் – யாழ்ப்பாணம் ப.தெ.சங்கம்
02. மாணிக்கம்–சின்னத்துரை – அரியாலை ப.தெ.சங்கம்
03. இ.ரகுநாதன் – கோப்பாய் ப.தெ.சங்கம்
04. செ.செல்வரத்தினம் – அச்சுவேலி ப.தெ.சங்கம்
05. தம்பு–இராசரத்தினம் – கரவெட்டி ப.தெ.சங்கம்
06. ம.நவயுகன் – பருத்தித்துறை ப.தெ.சங்கம்
07. பாலச்சந்திரன்–சசிக்குமார் – சாவகச்சேரி ப.தெ.சங்கம்
08. அழகரத்தினம்–விமலதாஸ் – கொடிகாமம் ப.தெ.சங்கம்
09. மரியதாஸ்–அமலதாஸ் – வேலணை ப.தெ.சங்கம்
10. இ.ஜேசுதாஸன் – ஊர்காவற்றுறை ப.தெ.சங்கம்
11. செல்லத்துரை–நகுலேஸ்வரன் – மானிப்பாய் ப.தெ.சங்கம்
12. மு.ஜெகதீஸ்வரன் – சங்கானை ப.தெ.சங்கம்
13. இ.யசோதரன் – பண்டத்தரிப்பு ப.தெ.சங்கம்
14. து.தயாபரன் – காரைநகர் ப.தெ.சங்கம்
15. இராசரத்தினம்–நவரத்தினம் – கோண்டாவில் ப.தெ.சங்கம்
16. சின்னத்துரை–ஜெகநாதன் – சுன்னாகம் ப.தெ.சங்கம்
17. நா.மகேந்திரம் – தெல்லிப்பளை ப.தெ.சங்கம்

## எலுமிச்சை சாறு

இன்றைய இளைஞர்களும் நடுத்தர வயதுக்காரர்களும் பெரிதும் பாதிக்கப்படும் ஒரு விடயம் சிறுநீரகக் கல். இருபது வயது இளைஞர்கள்கூட இந்தப்பிரச்சினையில் சிக்கி அவதிப்படுகின்றனர். இதற்கு கத்தியின்றி இரத்தமின்றி ஒரு சிகிச்சை இருக்கிறது. அதுதான் எலுமிச்சை!

ஆம், எலுமிச்சை சாறு பருகுவதால் சிறுநீரகத்தில் கற்கள் உருவாவது தடுக்கப்படுகிறது. இது குருட்டுத்தனமான வாதமல்ல. 100சத விகிதம் ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள உண்மை!

அமெரிக்காவின் சோன் டியாகோ கிட்னி ஸ்டோன் சென்ரறின் இயக்குனர் ரோஜர் எல்சர் என்பவர் இதனை நிரூபித்துள்ளார். சிறுநீரகத்தில் கல் உருவாகமல் தடுக்க மொத்தம் ஐந்து வழிகள் உள்ளனவாம்.

அதில் முக்கியமானது எலுமிச்சைச் சாறு அதிகமாகப் பருகுவது. பொதுவாகவே பழச்சாறுகளை அதிகமாகப் பருகுவதன் மூலம் உடலில் உப்பு சேர்வதை தவிர்க்க முடியும். அதிலும் சிட்ரிக் அமிலத் தன்மை கொண்ட பழங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். எலுமிச்சையில்தான் அதிகளவு சிட்ரைட் உள்ளது. எனவே, எலுமிச்சைச்சாறு மூலம் சிகிச்சை தருகிறார்கள். இதற்கு லெமனேற் தெரபி என்று பெயர்.

தேவையான அளவு எலுமிச்சையை சாறு பிழிந்து இரண்டு லீற்றர் தண்ணீரில் கலந்து வேளைக்கு நான்கு அவுன்ஸ் வீதம் தினமும் பருகுவதுதான் இந்த லெமனேட் தெரபி. செலவு அதிகம் பிடிக்காத தொந்தரவில்லாத சுவையான சிகிச்சை.

இந்த லெமனேட் தெரபியால் சிறுநீரகத்தில் கல் உருவாவது 1.00 இலிருந்து 0.13 வீதமாகக் குறைவது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

# மாரடைப்பு Heart Attack



மாரடைப்பா? இல்லையா என்பதை ஐந்தே நிமிடத்தில் கண்டு பிடித்து விடலாம். இதனை உடனடியாக கவனிக்காவிட்டால் இதயத்தின் திசுக் களை செயலிழக்கச் செய்து இதயத்தின் பம்ப் செய்யும் செயற்பாடு பாதிக்கப் பட்டு மார்பு வலி, மூச்சிரைப்பு, பட படப்பு, மயக்கம் என்று அடுத்தடுத்து தொடர்ந்து, கடைசியில் திடீர் மரணம் சம்பவித்துவிடும். உலக இதயக்குழு, ஐரோப்பிய இதயக் கழகம், அமெரிக்க இதயக்கழகம், அமெரிக்க இதயச் சங் கம் இந்த நான்கும் சேர்ந்து, உலக ஆய்வு கூட்டமைப்பு அமைத்து மார டைப்பின் வகைகளை வகுத்துள்ளன. மாரடைப்புகள் மொத்தம் ஆறு வகை யாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து, ஆறாவது வகை மாரடைப்பு க்கு காரணம், ஸ்டென்ட்டையும், பைபாஸ் கிராங்குகளையும் சரியாகப் பாதுகாக்காததால் தான். பெரும் பாலான மருத்துவர்கள் நோயாளிக ளிடம் பேசும் நேரம் குறைவு. அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடு களில் மருத்துவர், நோயாளி இவர் களின் ஆலோசனை பல மணி நேர மாகிறது. இதனால் நோயாளிகள் எப் போது என்ன செய்ய வேண்டும் என் பதைத் துல்லியமாகத் தெரிந்து கொள் கின்றனர்.

## முதல் வகை மாரடைப்பு

இந்த வகை மாரடைப்பு இரத்த நாளத்தில் கெட்ட கொழுப்பினால் அடைப்பு ஏற்பட்டு இறுதிக்கட்டத்தில் இரத்தம் உறைந்து முழு அடைப்பு ஏற் படுவது. இதனால் ஈ.சி.ஜியில் மாற்றம் ஏற்படுகிறது. இதனை ஸ்டெமி மார டைப்பு என்று அழைக்கின்றனர். இதனை உறுதிசெய்ய டிரோப்டி டெஸ்ட் செய்ய வேண்டும். அருகில் உள்ள வைத்தியசாலையில் 2 மணி நேரத் தினுள் ஆஞ்சியோகிராம், பிளாஸ்டி ஸ்டென்ட், பைபாஸ் செய்ய வேண்டும். மாரடைப்புக்குக் காரணமான இரத்தக் கட்டியை கரைத்தவுடன் மீதியுள்ள அடைப்பை பலூன் ஸ்டென்ட் வைத்துக் குணப்படுத்த வேண்டும்.

முதல் 2 மணி நேரம் கோல் டன் கவர் என்று அழைக்கப்படுகிறது. குரோனரி இரத்தக் குழாயில் முழு அடைப்புக்குக் காரணமான இரத்தக் கட்டியை 2 மணி நேரத்தில் கரைக்க வேண்டும். இல்லையேல் அந்த இரத்த நாளம் ரத்தம் செலுத்தும் இதயத் தசைகள் அழிந்து (நெக்ரோசில்) இதயத்தின் இரத்தத்தை செலுத்தும் திறன் இஜக்சன் பிராக்ஸன் (இ.எப்) குறைந்து மூச்சுத் திணறல், படபடப்பு, இரத்த அழுத்தம் குறைதல் போன்ற பலவித சிக்கலை ஏற்படுத்தி மர ணத்தை ஏற்படுத்தும். அதனால்தான் நேரம் விரயமாகாமல் 2 மணி நேரத் தில் சிகிச்சையைத் தொடங்கி இதய த்தை காப்பாற்ற வேண்டும். இதனை முதன்மை பலூன் சிகிச்சை என்று அழைப்பர்.



## இரண்டாவது வகை மாரடைப்பு

இந்த வகைக்கு காரணம் வேறு விதமானது. இதயத் தசைகளு க்கு பிராண வாயு தேவை. அதற்கு ஈடு கொடுத்து சமமாக பிராண வாயுவைக் கொடுக்க வேண்டிய சமநிலையில் வேறுபட்டால் குறை ஏற்பட்டு முழு அளவு தடைப்பட்டால் மாரடைப்பு மர ணம் ஏற்படும். இரத்தம் தடைப்பட்டால் இரத்தம் உறைந்து விடும். இந்த வகை மாரடைப்பு மரணம் இள வயதினருக் கும் வரும். ஆஞ்சியோ கிராம் செய்து பார்த்தால் கரோனரி இரத்தக் குழாய் கள் அடைப்பு இன்றி இருக்கும் நடுத்தர இளம் பெண்களுக்கு சாதாரணமாக வரும். ரத்த நாளச்சுருக்கம் கண்ணுக் குத் தெரியாத மைக்கிரஸ் கோப் இதயத் தினுள் இருக்கும் நாளங்களின் சுருக்கத் திற்கும் அடைப்புக்கும் இஸ்மியாவும் அர்த்திமியாவும்தான் காரணம்.

## மூன்றாவது வகை மாரடைப்பு

நீண்ட நேரம் இரத்த நாளம் சுருங்கினால் இரத்தம் உறைந்து அடை ப்பு ஏற்பட்டு அதன்மூலம் மாரடைப்பு உண்டாவதுதான் இந்த வகை.

## நான்காவது வகை மாரடைப்பு

மாரடைப்பு வந்த பின் பலூன் ஸ்டென்ட் சிகிச்சை செய்யும்போது ஸ்டென்டில் இரத்தம் உறைந்து அடைப்பு ஏற்படும். இது ஸ்டென்ட் அடைப்பு எனப் படும். அதனால் வரும் மாரடைப்பு பாதக மான விளைவுகளை ஏற்படுத்தும். நல்ல மருந்துகளால் இதை உடனடியாக தடுத்து விடலாம்.

## ஐந்தாவது வகை மாரடைப்பு

ஸ்டென்ட் சிகிச்சைக்கு பிறகு அந்த ஸ்டென்ட் என்ன வகை எப்படிப் பட்டது போன்ற முக்கிய குறிப்புகளை நன்கு தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்படித் தெரிந்துகொண்டு கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வர வேண்டும். அதாவது ஸ்டென்ட் வைத்த மருத்துவர் அல்லது ஸ்டென்ட்டைப் பற்றி நன்கு தெரிந்த நிபுணரிடம் ஆலோசனை பெற்று ஸ்டென்டின் இன்றைய நிலை அதில் கொழுப்பு படிந்துள்ளதா என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண் டும்.

ஸ்டென்ட் மூடி மாரடைப்பு வரா மல் தடுக்க தகுந்த நிபுணரின் கண்கா ணிப்பில் பரிசோதனைகள் செய்து காத் துக்கொள்ள வேண்டும். ஸ்டென்ட் சிகி ச்சை செய்து 20 ஆண்டுகள் மருத்துவம் பார்த்து நலமாக உள்ளவரும் உண்டு. 2 ஆண்டுகளில் ஸ்டென்ட் மூடி மாரடைப் புடன் வந்தவரும் உண்டு. முதலாமவர் நல்ல வாழ்க்கை முறையைக் கடைப் பிடிப்பவர். இரண்டாமவர் தான்தோன்றித் தனமாக வாழ்பவர். ஸ்டென்ட் முழுவதும் மூடினால் மாரடைப்பு, மூச்சிரைப்பு, பட படப்பு, இனம் தெரியாத அசதி போன்றன வரும். இது வராமல் தடுக்க பல கட்டங் களில் பரிசோதனைகள் செய்துகொள்ள வேண்டும்.

[8ம் பக்கம் பார்க்க]

## வடமாகாண பனை தென்னை வள சமாசத்தினால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும் 2012ம் ஆண்டுக்கான நாட்காட்டிகளின் விலை விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

கணினி மூலம் மிகவும் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டு தரம்மிக்க ஓவ்செட் இயந்திரத்தின்மூலம் அச்சிடப்படுகின்ற இந் நாட்காட்டிகள் கீழ்க் குறிப்பிடப்படும் அளவுகளிலும், அமைப்புக்களிலும் வெளியிடப்படவுள்ளன. இவற்றை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாட்காட்டியின் வகையினையும் தேவைப்படும் தொகையினையும் விரைவாக தமக்கு அறியத்தருமாறு சமாசம் கேட்டுள்ளது.

01 தங்கள் நிறுவனத்தின் விளம்பரங்கள், படங்கள் 16.5"×8.5" அளவுடைய (கிடையாக)மட்டையில் பல வர்ணங்களில் (4 கலர்) அச்சிட்டு மேல்பகுதி தகர மடிப்பைக் கொண்டதாகவும், அத்தோடு 13.5"×11.5" அளவைக்கொண்ட 12 மாதங்களுக்கும் 12 தாள்களைக் கொண்டதாக நாட்காட்டிகள் அமையும்.

இதன் விலை வருமாறு,

- 500ற்கு மேல் ஒன்றின் விலை ரூபா 68.00
- 201-500 வரையில் ஒன்றின் விலை ரூபா 87.00
- 101-200 வரையில் ஒன்றின் விலை ரூபா 89.00
- 01-100 வரையில் ஒன்றின் விலை ரூபா 119.00

02 18.5" ×11.5" அளவுடைய தாளில் 12 மாதங்களுக்கும் 12 தாள்களில் நாட்காட்டி பொறிக்கப்பட்டு அதே தாளின் மேல்பகுதியில் நிறுவனத்தின் விளம்பரங்கள் தனி வர்ணத்தில்(1கலர்) அச்சிட்டு, மேல் பகுதி தகர மடிப்பைக் கொண்டதாகவும் இருக்கும்.

இதன் விலை வருமாறு,

- 01-100 வரை ஒன்றின் விலை ரூபா 57.00
- 101-200 வரை ஒன்றின் விலை ரூபா 55.00
- 201-300 வரை ஒன்றின் விலை ரூபா 54.00
- 301-400 வரை ஒன்றின் விலை ரூபா 53.00
- 401-500 வரை ஒன்றின் விலை ரூபா 52.00

03 நாட்குறிப்பேடுகள் (டயறி) கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, அதில் அனைத்து பனை தென்னை வள நிறுவனங்கள், சித்த வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் உள்ளிட்டவற்றின் முக்கியமான தொழிற்பாடுகள், திட்டங்கள், தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள், நிறுவனத்தின் முக்கியஸ்தர்களின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் பிற முக்கியமான தகவல்கள் அச்சிடப்பட்டு டயறியுடன் இணைத்து விநியோகிக்கப்படும் எனவும், டயறிகள் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் மேற்படி விபரங்களுடன் விரைவாக தொடர்பு கொள்ளுமாறும் சமாசம் கேட்டுள்ளது.

## கல்வி உத்தியோகத்தர்கள் மாதாந்த மாநாடு!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த மாநாடு எதிர்வரும் 12.10.2012ல் சமாச கூட்ட மண்டபத்தில் தலைமைக்காரியாலய கூ.பரிசோதகர் திரு.இ.விஜயமோகனராஜா தலைமையில் மு.ப.10.00 மணிக்கு நடை பெறவுள்ளதால் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சமாசம் கேட்டுள்ளது.

**கூட்டுறவு...** 1ம் பக்க தொடர்ச்சி

தும்பு உற்பத்திப் பொருட்களை தயாரிக்கும் சங்கங்கள் தமது உற்பத்திகளை பாவனையாளர்களுக்கு கிடைக்கக்கூடிய வகையிலும் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பாவனைக்கு வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து சந்தைப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதுடன் அதன் விலையிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பனையிலிருந்து பெறப்படுகின்ற உப உணவுப் பொருட்களை குறிப்பாக ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு, பாணிப் பனாட்டு என்பவற்றை தரமான வகையில் உற்பத்தி செய்து பாம் கோப்சிற்றிகளில் விற்பனை செய்வதற்கும் ஏனைய நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்துவதற்கும் கூடிய முயற்சிகளை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கலந்துரையாடலில் கூ.அ. உதவி ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில் ஆளுனரால் வழங்கப்பட்ட இவ் அபிவிருத்தி நிதியை குறிப்பிட்ட திட்டங்களுக்கே சங்கங்கள் பயன்படுத்த வேண்டுமென தெரிவித்ததுடன், இந்நிதியை சிறந்த முறையில் பயன்படுத்தி வரும் சங்கங்கள் பாராட்டுக்குரியன என்றார்.

இக்கலந்துரையாடலில் இந் நிதியை பெற்றுக்கொண்ட சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**புதிய கூட்...** 1ம் பக்க தொடர்ச்சி

6 சொகுசு கதிரைகளையும், கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம் 5 சொகுசு கதிரைகளையும், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் இ.வியஜமோகனராஜா மருந்துகளுடன் கூடிய முதலுதவிப் பெட்டி ஒன்றினையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# பனை வளத்தின் 9 அபிவிருத்திக்கு வழி பிறக்குமா?



வடபகுதியில் காணப்படும் திண்ம, திரவக் கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி முறைகள் மூலம் சேதனப் பசளையாக்கி எமது மண் வளத்தையும் மக்கள் வாழ்வையும் மேம்படுத்துவோம்.

ஒரு பக்கத்தில் மாநகரத்தில் பிரச்சினையாக இருக்கும் சேதனத் திண்மக் கழிவுகளை விரைந்து உக்க வழியிருப்பதால், மாநகரத்தை சுத்தமானதாக வைத்திருக்க முடிவதுடன் இந்தக் கழிவுகள் பாதைகளில் கொட்டப்படுவதால் ஏற்படும் சூழல் பிரச்சினைகளையும் விரைந்து தவிர்க்க முடியுமல்லவா? மேலும் இவ்வாறான நுண்ணங்கிகளின் கரைசலின் அளவு அதிகமாகத் தேவைப்படுவதால் இத்தொழில்நுட்பத்தை க.பொ.த.சாதாரண தரத்தை கற்றுத்தேற முடியாத இளைஞர், யுவதிகளுக்குப் பயிற்றுவித்து அவர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க முடியும். கழிவை மீள் சுழற்சி செய்யும் தொழில் நுட்பத்தை நாமும் உள்வாங்கும் நேரம் நெருங்கி வருகின்றது.

கடந்த 2-3 வருடங்களாக அராலிப் பகுதியில் அமைந்துள்ள வடிசாலையிலிருந்து வெளியேறும் வடிசாலைக் கழிவுநீரை பம்பி மூலம் அயலிலுள்ள நெல் வயல்களுக்குப் பாய்ச்சி எந்தவிதமான அசேதன பசளைகளையும் பயன்படுத்தாது சிறந்த நெல் அறுவடையை அவ்வூர் விவசாயிகள் பெற்றிருக்கிறார்கள். இது பற்றி அறிந்து இக்கழிவு நீரைப் பாய்ச்சிய வயல்களையும் அசேதனப் பசளை பயன்படுத்திய வயல்களையும் ஒப்பிட்டு நெல்லிலுள்ள பீடைத் தாக்கம் மற்றும் விளைச்சலை அவதானித்தபோது வடிசாலைக் கழிவுநீர் பாய்ச்சப்பட்ட வயல்களில் பீடைகளின் தாக்கம் குறிப்பாக நெற்சந்துகுத்தி, இலை மடிச்சுக்கட்டி, தத்திகள் மற்றும் கபிலப் புள்ளி நோய் என்பன வெகுவாக குறைந்திருந்ததை அளந்தறிய முடிந்தது. ஆனால் அசேதனப் பசளைகளைப் பயன்படுத்திய நெல்வயல்களில் மேற்குறிப்பிட்ட பீடைத்தாக்கம் அதிகமாக இருந்ததுடன் அதில் விளைச்சலும் கணிசமான அளவு குறைவடைந்திருந்ததையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது எனில், வடிசாலைக் கழிவு நீரை முதலாகப் பயன்படுத்தி அதனை மீள்சுழற்சிக்கு உட்படுத்திச் சேதன திரவப் பசளையாக மாற்றியெடுக்கும் வாய்ப்பினை இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். எங்களூர் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் திண்ம மற்றும் திரவக் கழிவுகளைப் பயன்படுத்திச் சேதனப் பசளைகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தினை இன்னும் இன்னும் ஆய்வுக்குட்படுத்தி எங்களது சூழலை சுத்தமானதாக நஞ்சற்றதாக வைத்திருக்க ஆவன செய்யும் அதே வேளையில் எங்களூர் மண்ணின் வளத்தையும் அதிகரித்து மேம்படுத்த முடியுமென்ற நம்பிக்கை பிறந்திருக்கின்றது.

இது சார்ந்த ஆய்வுகளை முடுக்கிவிடுங்களேன். உலகத்தைப் பற்றியும் உலகளாவிய விஞ்ஞான சஞ்சிகைகளிலும் பிரசுரிப்பதையே முனைப்பாகக் கொண்டிருக்கும் நாங்கள், எங்களூர் வளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் தொழில்நுட்ப அறிவினை ஆய்வு மூலம் கண்டுபிடித்து எங்களூர் மக்களும் பிரதேசமும் வளமடைய வழி செய்து கொடுக்க முயல்வோமா? மூன்று தசாப்தமாக நெருக்குவாரப்பட்டு இடிந்து போயிருக்கும் வடபகுதியில் இவ்வாறான உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி எமது பிரதேசம் மீளெழுந்து வளம்பெறவும் இங்குள்ள மக்கள் அதிலிருந்து பயனடையவும் எங்களது ஆய்வுகள் கைகொடுக்கக்கூடாதா?

இயற்கையுடன் இயற்கையை அனுசரித்து வாழப் பழக வேண்டும். எமக்கு இயற்கை அன்னை தந்த அரும்பெரும் சொத்து பனை வளமாகும். இந்த வளத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை மூலப்பொருளாக்கி முதலாக்கும் வழிவகைகளை மேலும் ஆராய்ந்தால் இன்னும் பலவிதமான மதிப்பேற்றஞ் செய்த பொருள்களைத் தரம் வாய்ந்ததாக ஆக்கி உள்ளூர் மற்றும் உலகச் சந்தைகளில் உரிமையுடன் உலாவர வைக்க முடியும். எங்களூர் உணவுப் பொருட்களுக்கும் ஏனைய உற்பத்திப் பொருட்களுக்குமான கேள்வியை அதிகரிக்கும் வழிவகைகளை இன்னும் ஆராய்ந்தால் நிச்சயம் அவற்றின் விற்பனையைப் பல மடங்குகளாக உயர்ந்திவிட முடியும். இதில் பனைவளஞ்சார் கைத்தொழில்மய விளை பொருட்களாக கற்பகதருவின் பொருட்களை மாற்றிவிட முடியும்.

பனை மரத்திலிருந்து பெறப்படும் பொருட்களிலிருந்து உணவுப் பொருட்களை இன்னும் மதிப்பேற்றஞ் செய்து உருவாக்குதல் நன்று. இந்த உணவுப் பொருட்களின் தூய்மை அல்லது தரம் மிகவும் கவனிக்கப்படல் வேண்டும். குடிசைக் கைத்தொழிலாகவும் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பினூடாகவும் உற்பத்தியாகும் இந்த உணவுப் பொருட்கள தரமானவையாகவும் சுத்தமானவையாகவும் இருக்க வேண்டுமெனப் பலரும் எதிர்பார்க்கின்றனர். குறிப்பாகத் தனியாரினால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் தரமில்லாது இருப்பதுடன் கலப்படம் செய்யப்பட்டு தரங் குறைந்து விற்கப்படுவதால் எம்மவர்கள் வாங்கிப் பயன்படுத்தப் பின்னடிக்கிறார்கள். தனிப்பட்டவர்களால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கான கேள்வி குறைந்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**தலைவர், விவசாய உயிரியல்துறை,**
**விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்**

### பதநீரிலிருந்து பெறப்படும் மதிப்பேற்றஞ் செய்த உணவுப் பொருட்கள்

பதநீரிலிருந்து பல்வேறு வகையான பொருட்கள் மதிப்பேற்றஞ்செய்து பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன, கருப்பட்டி அல்லது பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனந்தேன், பனஞ்சர்க்கரை ஆகியனவாகும்.

சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்பதாகவே பனையிலிருந்து பதநீரை இறக்கி பனை வெல்லம் தயாரிக்கப்பட்டது. இந்தியாவின் ஆந்திரா, கேரளம், கர்நாடகம், மேற்கு வங்காளம் இவற்றுடன் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் பனை வெல்லம் தயாரிக்கப்படுகின்றது. இலங்கையில் வடபகுதியிலேயே இந்த வெல்லம் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பதநீரிலிருந்து உருவாகும் பனைவெல்லம் பற்றி மகாத்மா காந்தியடிகள் இப்படிக் கூறியிருக்கின்றார்.

(வளரும்)

**மாரடைப்பு** 5ம் பக்கத் தொடர்ச்சி

### ஆறாவது வகை மாரடைப்பு

மாரடைப்புக்குப் பின் பைபாஸ் செய்தவர்களுக்கு வரும் மாரடைப்பு இதுவாகும். இங்கு பைபாஸ் செய்த பல கிராப்டுகளில் அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படும். பைபாஸ் செய்தவர்களுக்கு பைபாஸ் கிராப்டுகள் வைக்கப்பட்டுள்ளது எனில், அதனை அதி கவனமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இது இரத்த நாளம் போன்ற இரத்த ஓட்டமில்லை. வெறும் இணைப்புத்தான். எத்தனை கிராப்டுகள் எந்தெந்த இடங்களில் வைக்கப்பட்டுள்ளன போன்றவற்றை வைத்து கண்காணிக்க வேண்டும். இதற்குத் தேவையான பல பரிசோதனைக் கிராம்களை செய்து டி.எட்.டி. எக்கோகாடியோ கிராம் செக் ஆஞ்சியோ கிராம் செய்ய வேண்டும். இரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், கொழுப்பு என்பவற்றை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். இவர்கள் தனது இதயம் பைபாசால் 100சதவீதம் நலமாக உள்ளது என்று எண்ணாமல் கிராப்ட்களை கண்காணிக்க வேண்டும்.

### என்ன செய்ய வேண்டும்?

இரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய், அதிக கெட்ட கொழுப்புகள் உள்ளவர்களும் இரத்தக்குழாய் அடைப்பு உள்ளவர்களும் ஸ்டென்ட் சிகிச்சை செய்து ஸ்டென்ட் வைத்துள்ளவர்களும் பைபாஸ் கிராப்ட் வைத்துள்ளவர்களும் தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். தனி மனித ஒழுக்கம், மது, மங்கை, புகைத்தல் இல்லாமல் இயற்கை உணவு வகையிலும் ஒழுக்க நெறியோடும், உடற்பயிற்சி, யோகா என்பவற்றோடு சிறந்த இதய வல்லுனர் ஆலோசனையையும் பெற்று உங்கள் இதயத்தைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

நன்றி: அலை ஓசை

## கூட்டுறவுக் கண்காட்சி

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் எதிர் வரும் 8, 9, 10ம் திகதிகளில் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண கூட்டுறவு மாகாண அமைச்சில் கூட்டுறவு கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பின்வரும் சங்கங்கள் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கும் அவற்றை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம், சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி ப.தெ.வ. அ.கூ.சங்கம், வேலணை ப.தெ.வ. அ.கூ.சங்கம் ஆகிய சங்கங்களே கலந்துகொள்ளவுள்ளன.

இவற்றுடன் சங்கங்களின் செயற்பாடு தொடர்பான விபரணக் காட்சிகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.


## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதிவு இலக்கம்: J/1594 | டச்சு வீதி, சாவகச்சேரி. | பதிவு திகதி: 11.03.1972

எமது சங்கம் அங்கத்தவர், பணியாளர், மகளிர் மற்றும் முன்பள்ளி மாணவர் ஆகியோருக்கான பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தி வருவதுடன், சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கிய செயற்பாட்டிலும் ஊக்கத்துடன் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் எமது செயற்பாடுகளாக,

### அங்கத்தவர் நலத்திட்டம்
- ஓய்வூதியம் வழங்கல்.
- விபத்து, மரணக் கொடை வழங்கல்.
- ஓய்வுபெற்ற அங்கத்தவர் கௌரவிப்பு
- சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு.
- கல்விப் பயிற்சி வழங்கல்.

### கிராமிய வங்கிச் சேவை
- நிலையான வைப்பு கடன் சேவை.
- ஓய்வூதியச் சேவை.

### மகளிர் சேவை
- தையல், மனைப்பொருளியல், அழுக்குக்கலை பயிற்சி வழங்கல்.
- சுயதொழில் உற்பத்தியை ஊக்குவித்தல்.
- கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல்.

### தொழில்நுட்ப சேவை
- நிழற்பட பிரதியிடல்.
- தொலைநகல் வசதி.

### வாடகைச் சேவை
- கதிரைகள் வாடகைக்கு வழங்கல்.

### சமூகம்சார் அபிவிருத்திச் செயற்பாடுகள்
- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங் கல்.
- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்றவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கல்.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி வழங்கல்.
- சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்த படியாக ரூபா 2,000/- வழங்கல்
- முன்பள்ளிகளின் விளையாட்டுப்போட்டிகளுக்கு அன்பளிப்பாக தலா ரூபா 2,500/- வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் வழங்கல்.
- முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கல்.

### பனை, தென்னை சார் உற்பத்திகள்!

பனை, தென்னை வளங்களிலிருந்து தயாரிக்கப்படும் எமது சங்கத்தின் உற்பத்திகளான தரமான பனை வெல்லம், தரமான போத்தற்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 021 227 0086, 021 231 3572 தொலைநகல்: 021 227 0086


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2011ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.